**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| STC/CC.No. | : | MC No.03/2022 |
| Deposition of Witness for | : | PW – 1 |
| Name and Age | : | திருமதி.மங்கம்மாள் (28) |
| Father / Husband Name | : | மாரிமுத்து |
| Occupation | : | இல்லதரசி |
| Village | : | வீராசனூர் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 23.07.2025

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act of 1873.

**Respondent Present.**

**ம.சா – 1**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc.,B.Ed படித்துள்ளேன். எதிர்மனுதார் என்ன படித்துள்ளார் என்றால் B.E படித்துள்ளார். எனக்கு திருமணமாகி எத்தனை ஆண்டு ஆகுகிறது என்றால் 7 ஆண்டுகள் ஆகும். எதிர்மனுதாருக்கும், எனக்கும் திருமணத்தின் பயனான எத்தனை குழந்தைகள் பிறந்தார்கள் என்றால் இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். திருமணத்திற்கு பிறகு எத்தனை ஆண்டுகள் பிரச்சனை இல்லாமல் வாழ்ந்து வந்தோம் என்றால் 3 ஆண்டுகள் ஆகும். திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரருடன் எங்கு வாழ்ந்து வந்தேன் என்றால் சவுளூரில் எனது மாமனார், மாமியார் வீட்டில் வாழ்ந்தேன், எனது கணவர் பெங்களூரில் வாழ்ந்து வந்தார். எனது கணவர் பெங்களூரில் பணி முடித்து விட்டு வாரம் எத்தனை முறை பெங்களூரிலிருந்து நான் வசித்த வீட்டிற்கு வந்து செல்வார் என்றால் வாரம் ஒரு முறை வருவார். அதன் பின்னர் மனுதாரரும், எதிர்மனுதாரரும் பெங்களூரில் வசித்து வந்தோம் என்றால் திருமணம் ஆகி 6 மாதங்களுக்கு பிறகு பெங்களூரில் குடியேறினோம். பெங்களூரில் எத்தனை மாதங்கள் குடியிருந்தோம் என்றால் 4 மாதங்கள் குடியிருந்தோம். எனது கணவருடன் சவுளூரிலும், பெங்களூரிலும் வாழ்ந்து வந்தபோது அனுசரிக்காமல் சண்டை போட்டு வந்தேன் என்றால் சரியல்ல. நானகதான் கோபித்துக்கொண்டு எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்கு எதிராக கிருஷ்ணகிரி குடும்ப நீதிமன்றத்தில் HMOP No.133/2020 மனு தாக்கல் செய்து மனு நிலுவையில் இருக்கும் சமயத்திலேயே சமரசம் ஏற்பட்டு நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்த சமயத்தில் 3-வது மனுதாரர் பிறந்தார் என்றால் சரிதான். HMOP NO.180/2022 மனுவில் எனது கணவருடன் சேர்ந்து வாழ முடியாது என தெரிந்துள்ளேன் என்றால் சரிதான், எதிர்மனுதாரர் திலகவதி என்பவருடன் தொடர்ப்பில்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.07.23 18:52:29 +0530

இருந்த காரணத்தினாலும், 2-வதாக சுகஸ்ரீ என்பவரை திருமணம் செய்து கொண்டதால் சேர்ந்து வாழ இயலாது என தெரிவித்தேன். மேற்படி சங்கதிகளை நிருபண செய்ய எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் இடைகால ஜீவனாசம் IA No.3/2024 in OP No.51/2024 மாதம் எனக்கு ரூ.6000/- ஜீவனாம்சம் கொடுக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி **உத்தரவு சான்றிட்டப்பட்டநகல் எ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிர்மனுதாரர் விவாகரத்து பெற்றுவிடுவார் என்பதற்காக காலம் கடத்தவோ மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பாலக்கோடு சார்பு நீதிமன்றத்தில் மற்றவே மனு தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.16 சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் மாரிமுத்துவிற்கு பாதியப்பட்டது. மேற்படி ம.சா.ஆ.16 சொத்திற்கும் எதிர்மனுதாரருக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதி வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தனிபட்ட முறையில் குழந்தைகள் பாரமரிப்புகாக நேரடியாக எதிர்மனுதாரரிடம் கேட்டவில்லை என்றாலும், நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.17-ல் மிகைப்படுத்தியே நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் 2-வது மனுதாரருக்கு எந்த வித உடல் நிலை பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. குழந்தைக்கு உடல் நலம் சரியில்லை என எதிர்மனுதாருக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, கணவர் தரப்பு உறவினர் மூலம் தெரிவித்தேன். மேற்படி உறவினர் யார் என்றால் பெயர் தெரியாது. நான் உறவினர் மூலம் தெரியப்படுத்தப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.19-ல் தொகைகள் மிகைப்படுத்தி இல்லை என்றாலும், அதிகபட்சம் 150 தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. 02.12.2023-ம் தேதியிட்ட ம.சா.ஆ.20 மிகைப்படுத்தியே தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 08.01.2024-ம் தேதிக்கு பிறகு 2 மற்றும் 3-ம் மனுதாரர்களுக்கு கல்வி செலவிற்காக பணம் தேவைப்படுகிறது என எதிர்மனுதாரர் எந்த ஒரு அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான், ஜீவனாம்ச மனு தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.23 -ல் குறிப்பிட்டுள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் கண்ணு என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதன் விஸ்திரனம் தெரியாது. மேற்படி சொத்து பிரிக்கப்படாமல் இருப்பதால் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.24 -ல் குறிப்பிட்டுள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் கண்ணு என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதன் விஸ்திரனம் தெரியாது. மேற்படி சொத்து பிரிக்கப்படாமல் இருப்பதால் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.25-ல் குறிப்பிட்டுள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் கண்ணு என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதன் விஸ்திரனம் தெரியாது. மேற்படி சொத்து பிரிக்கப்படாமல் இருப்பதால் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.26 -ல் குறிப்பிட்டுள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் கண்ணு என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதன் விஸ்திரனம் தெரியாது. மேற்படி சொத்து பிரிக்கப்படாமல் இருப்பதால் பரிகாரம்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.07.23 18:52:39 +0530

கேட்க முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.22 –ல் குறிப்பிட்டுள்ள சொத்து யாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் கண்ணு என்பவருக்கு பாத்தியப்பட்டது. அதன் விஸ்திரனம் தெரியாது. மேற்படி சொத்து எனது கணவருக்கு பாத்திப்பட்டது என குறிப்பிடப்படாததால் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. எதிர்மனுதார் மீது பல புகார்கள் மற்றும் நீதிமன்றங்களில் மனுகள் தாக்கல் செய்தும் அவரை சரிவர வேலைக்கு செல்லமுடியாமல் மனஉலைச்சல் ஏற்படுத்திய காரணத்தினால் அவர் ரூ.70000/– சம்பளத்தை விட்டுவிட்டு ரூ.10000/– மட்டும் சம்பளம் பெற கூடிய எலட்சிஷன் வேலைக்கு செல்கிறார் என்றால் சரியல்ல. எனவே எதிர்மனுதாரர் தன்னை பாரமரிக்க முடியாத காரணத்தில் 1–ம் மனுதாரருக்கும் ஜீவனாசம் கொடுக்க இயலாது என்றால் சரில்ல. எதிர்மனுதாரர் 2, மற்றும் 3–ம் மனுதாரருக்கு ஜீவனாசம் கொடுக்க தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. எனவே ஜீவனாசம் மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Judicial Magistrate, Palacode

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2025.07.23 18:52:46 +0530